தேரைய்யர் வைத்தியம் -100.

தேரையர் வைத்தியம் - 100

கடவுள் துணை.

நூற்றி நான்காவது.

தேரையர் அருளிச் செய்த

வைத்தியம் — ௱.

சிறப்புப்பாயிரம்.

ஸ்துதி— கலிவிருத்தம்.

———x x x———

திருவி நாயகன் றென் கையிலாசத்தில்
அருமையா யெனக் கன்றுரைத்த பழ
மறுமை யில்லா வைத்ய நூற் சொலக்
குருமுனி பாதங் கொண்டு துதி செய்வாம். (௧)

குருமுனி அகஸ்தியன்.

நூற் பயன்.

செய்யும் வாதமுஞ் சேஷ்மமும் பித்தமும்
நைய்யுமார்க்கம் நலமுடனின்னமும்
கைய நெல்லிக் கனிபோல் மருந்தெலாம்
ஐயன் தேரைய னன்பான நூற்றே.

நூறுக்குள்ளே நொடிப் பேன் வியாதியை
ஆர் சொல்வார்களிங் கங்கத்திலுள்ளதை

(௨)

மீறுகின்ற சுரங்கள் தனைமிகக்
கூறு செய்யும் குருமொழி பார்த்திட
வாதபித்த சிலேர்ப்பம் சுரங்களின் தொகுப்பு (௨)

பார்த்து வாதசுரம் பத்துப் பன்னிரண்
டேற்ற வன்னி சுரமொன் பதுக்
சேற்றுமத்தின் சுரமது பத்திரண்
டாற்ற வென்ற பதிவு தனைச் சொல்வேன் (௩)

வன்னி - நெருப்பு - அதை பித்தம்

அறுபத்து நாற் சுரத்திற்கும் பூபதி குளிகை
சொல்லுஞ் சூதம் காந்தி வாளந் தன்னுடன்
வெல்லுந் திரிகடுகுத் திரிபாலையும்
கொல்லுங் காக்கணத் தின்விரை யோர் வகை
நல்லத் தாளுடன் நற் சையன் பாகியே (௪)

திரிகடுகு - சுக்கு - மிளகு - திப்பிலி - திரிபாலை கடுக்காய்
தான்றிக்காய் - நெல்லிக்காய் - கள் - தேன் - சையான்
பொற் சையாந் தரை!

பாதிரண்டுமே பாகுபதத்தினிற்
சோதியாம் அடுப் பேற்றி யெரித்திடின்.

நீதியானக் கியாழமது விட்டுக்
கோதிலாதரைத்துக் குறியாக்கிடே, (சு)

ஆக்கு இஞ்சி ரசமது பத்து நாள்
போக்கு மூன்று நாளிற் பொல்லச் சன்னியும்.

நீக்கி மெய்ச்சுரம் நீங்கிடும் பூபதி
போக்குமாகும் பெரிய தோர் வீக்கம் போம். (எ)

போக்கும் வீக்கமும் பொல்லாத குன்மமும்
ஏகு மெய் விட்டு எல்லாச் சுரங்களுந்
நாகமாகத் தவிக்கும் வியாதிக்கு
நாகமாகும் நற் பூபதியாமிதை. (அ)

0. நாகம் - சர்ப்பம்.

பூபதிக்கும் புருஷருக்கும் பூவைக்கும்
கோபமான கொடுக்சுரங் கண்டிடில்
ஆபத்துக்குத வன்றெனக் கிட்டாதலி
தீபம் நோக்கி நீ சிம்மென மூட்டிடே. (கூ)

பூவைக்கு → ஸ்திரிக்கு.

மூட்டிடப்பார் நீ மூவிரண்டாரு பேர்
நாட்டுவாய் குளிகை யரைப் பொன்று நாள்
நீட்டி யோதி நிலையில்லா மாந்தர்கள்
நாட்டு நோய்க்கு நமனிது வாகுமே
சுகவிரேசனம் வாயு அதுக்கும் திருமி (ய)

(விழவும் மருந்து)

ஆக்குதிரி பாலையாங் கிரிகடுகுடன்

வாக்குமுக்கக்காசு வாயுவிளங்கமும்

தாக்கு ஓமங் சோமனுப்பு ரோகணி

நாக்குவிடயம் நறுக்குமூலமொன் றே.

(க.க)

கிருமி - பூச்சி சோமனுப்பு - இந்துப்பு.

ஒன்றப்பாபல மெய்வேர் வகைகதித்து

நன்றப்பாநில வாகைசி வேதைவேர்

அன்றப்பா பழயரை யாமணக் கெண்ணெய்

நன்றப்பா லேகியம் போலதிரட்டிடே

(க.உ)

திரட்டிச் சீனி சிறுக வாயிலிட்டு
உருட்டு லேகியம் ஓர் கழஞ்சுள்ளுக்கு
மருட்டு பந்து விசைமலம் பேதியாம்
வருட்டுங் கஞ்சி வளமாகக் கொண்டிடே
(௧௫)

0. சீனி - சருக்கரை.

கொண்டிடும் வேப் பீர்க்கியொழுக்கில்
அண்டிடும் பூச்சி யப்பந் தெரிக்கிடும்
மண்டிடங் குடல் வாயு 0 அபானமால்
பண்டிடும் பேதி நூபதியாமிதே.
(௧௬)

அபானமால் - அபானவாயு

மூக்கிலிரத்தத்திற்கு - நசிகநெய்:

ஆமிது யேல மரிசிபலமரைத்
தாமிது ஆவி நெய்யிலோர்பாக்கள
வாமிது குழப்பி யொரு மூன்று நாட்
போமிது பிழிய மூக்கின்றத்தமே (௧௫)

கிரிப்பூச்சுக்கு மருந்து

ரத்தக்காசுக் கட்டிக்கரிப் பாக்குடன்
முத்த பொற்கருக் காய்வகை யோர் பலங்
நித்த மூன்று நாள் கியரைத்துட் கொள்
செத்துக்கிரிப் புகுச் செதித்தொடுமே (௧௬)

கல்லடைப்புக்கு

ஆடும் வெள்வா ழுரைத்த மரத்தழை
நாடுசக்கை நல்லமாயரைத்து பின்

நாடுமுள்ளிக் கா யாகவுருட்டி தி
போடுமூன்று நாட் போய் விடுங்கல்லுமே. (௧.எ)

முள்ளிக்காய் — கண்டங்கத்திரிக் காயளவு.

மாந்தச்சவலைக்கு

கல்லவங் கங்கறி கதிமஞ்சள் ஆமம்
வெல்லுங் திரிபலா திக்திரி கடுகுடன்

நல்ல இரகம் நற் கண்டாமையோடு
ஒல்லுங் காசிச்ச பத்திரி ௦ புள்ளியே. (௧.அ)

கண்டு - கண்டு - பரங்கி - ஆமையோடு.

உள்ளி — வெண்காயம்.

உள்ளியோர் வகைக் கேயரைக்காபலம்
மெள்ளவே வறுத்தே வெந்நீர் விட்டரை
கள்ளமின்றிக் கருங்குன்றியாக்கித் தாய்
குள்ளபாலி லரைத்துக் கொடுத்திடே (௧௧)

கொடுத்திடாயொரு குன்றியோர் வேளைக்கு
விடுத்தகாலிரு போதொரு மூன்றுநாட்
கடுத்து மாந்தங் கயங்கிச்ச வலையும்
மடித்து மந்திர மசியென் றோதிடே. (௧௨)

இரும்பாணைக் கிரிகை:

ஓது கந்தி பிரதலவங் கடுகு
சாது. நாவிச் சலியாமலோர் வகை
மீது தொட்டிப் பாஷாணம் நெருங்கி சாற்
கோது புளியிலைச் சாற்றினிலாட்டிடே (௨.௧)

ஆட்டிடு இரு சாமமும் அப்பனே
நீட்டி மாத்திரை கிழுவலர்த்திப் பின்
சூட்டுக்கும் சில சுரங்களாறு படும்
மூட்டு மந்திர முன் சொன்ன தாருமே. (௨.௨)

குளிர் அரக் குளிகை:

ஆகுந்துக் கங் கதுர் பாஷாணத்திரி
யேகும் வாளமிருகை வேதியான்
ஒருமோறி லரைத்துப் பயற்றள
விகுக்கிர சுரங்களும் நீங்குமே. (உஉ)

நுக்கம், (அ) பாஷாணம் (ரு) வாளம் (உ) வேதி - சாத்திரபேதி.

மேகம் - க. - க்கும் - காரியச் செந்தூரம்.

நீங்குதாரங்கா ரியக்சமணைடை
வாங்கி ௦ ஆரியச்சார் ஹிட்டரைத் தேயதை
ஓங்கு மோட்டிடல் வைத் தேயோடு டுமயே
தேங்குசிலைத் திறமாகச் சுற்றிடே
(உ.அ)

சூரி நத்தைச் சூரி.

சத்திக் குஞ்சரஞ் சூது செய்யாமலே
நற்றி வெந்தனை நன்று யெடுத்துப் பார்
அக்கிமா முதற் தன் பாய்க் துதி செய்ய
எந்துமேக மிருபத் தொன்றுமே. (உரு)

குஞ்சரம் — கஜபுடம்.

ஒன்று காரீயச் செந்தூரம் ஓர் பணம்
நன்றாக நறு நெய்யி லெய்ந்திடல்
பன்றுட கிச்சா பத்திய மாகவே
மன்றில் பாதியில் மாநோய் பறக்குமே. (உசா)

தொடை வாதத்திற்கு.

பழக்கு மல்லிகை பாங்குடனே பிலை.
புறக்கும் ஆமணக் கெண்ணெயுறவாக
திறக்கவே வறுத்திவ் விதங்கட்டிடில்
எரிக்குமோ தொடை வாதமுமேங்குமே. (உஎ)

இரத்த சீழ் மூலத்திற்கு.

ஓங்கு பூவந்திச் சக்கை யெண்ணாறு பலன்
ஆங்கு ஓமம் அழிக்கில் விரை அக்கு
தேங்கு கீழ்க்காய் நெல்லி வேர்ப் புராணியும்
பாங்குறு செவ்வல்லிக் கொடிபார்த்திடே. (உஅ)

பூவந்தி — மணிப்புலி.

பார்க்கிடாதி இடையம் பற்பாடகம்
நேர்த்திடா பரங்கிப் பட்டைச் சாதிக்காய்
வார்த்திடா படிரண்டு வெள்ளாட்டுப் பால்
சார்த்திடா யெடுத்துப் பிரகாசியே
(உ-ள)

ஆதிக் கேசரி வாகவு லர்த்தியே
சேர்த் தேயிடித்தே வடிசெய்துடன்
நேர்தனைப் பணவெட்டிடு நெய் தேக்கேடு
பாரிக்கைக் கொட்டைப் பாக்களவுண்டிடே
(௫௰)

உண்மடாயிரு போசறை மண்டலங்
கண்டுமுலக் கிராணிசிம் முலமும்
ஆண்டும் வயி றிரத்தக் கழிச்சலும்
மண்டிடும் ஆவி நெய்ய முதாக்கிடே
(௩௧)

தந்தக்கருப்புக்கு.

பாக்கென் அக்குத் தோல் நாணைச் சிவியே
பாக்குடனாக்குள் வைத்து அவைத்திடல்
வீக்கம் நீங்கும் - வெருந்தந்த மாகும் நீர்
வாய்க்குட் கொப்பளிக்க கருப் பகலுமே.
(௩௨)

சுவைத்தல் - மெல்லல்.

அஞ்சுவாக மடக்கித் தடுதாழைக்
குக்சம் நொச்சி கொடுக்கிடுவேது தான்
மிஞ்சு நீரில் மிளகருணையின் வேர்
நொக்சமாயரைத்தே குழம்பேற்றிடே
(௩௩)

குக்சம் - குன்றி.

ஏற்றும் பேரது அரவிகும்பல் வாயிவெல்லாம்
பூற்ற விக்கமும் பூதமுகங்களும்
காற்று பொலழுத்தே தறைக்கு மீது
மாற்றுக் கீ சஞ்சீவி மாண்டிடார் நங்கட்கே
(௩௪)

தாம்பூர பற்பம்.

தங்கட்க்கேயொரு தாம்பூர நீற்றயான்
திங்களன்று திரித்தாற்றலறியே.
அங்கமாயவரைத் தன்தேறப்பியே
கங்கையைத் தரித்தோன்பாதமெண்ணியே (௩௫)

எண்ணியோர் கஜமேபுடம் பற்பமாகும்
சின்னுஞர் பணந்தான் கொடுமேகம் போம்
மண்ணில் ஆவிநெய்பா லறை மண்டலம்
எண்ணெணா வீரிய மெழுவாகுமே. (௩௬)

கஜபுடம் முற்றும்.

ஜாதிலிங்கக் கட்டு.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

ஆகுமே வாத மென்று அலைகுவர் மடையரப்பா
சாகுவாரதன் மேல்வீழ்ந்து சலித்து ஐம்புலனும் வாட
நாகமே யணிந் தோர் பாதம் நண்ணியெந் நேரமந்த
யோகத்தைக் கைவிடாமல் உறங்கியேதோர் வாதஞ் செய்வார்
செய்குவோர் லிங்கங்கட்டச் சேதியொன்றுரைக்கக் கேளீர்
உய்குபூவரசம் பட்டை யொன்னவர் வணங்கும் வேம்பு.

நைய்ய வேயுலர்த்தி நன்றாய் நற்குழிப்புடமே செய்து
பைய்யவே தயிலம் வாங்கி பாங்குடன் அருக்குத் தாக்கே
தாக்குவாயிரண்டு நாள்தான் தங்கமும் பொன்னுமாகும்
நோக்குவாய் ஆயிபாதம் நொடிக்குமுன் வாதமாகும்
தீக்கிய நினைவை மாந்தர் நீங்கிடா அரத்திற்றியந்தால்
பாக்கியவானே யாவன் பரந்திருக்சன்னியெல்லாம்
(௫௧)

எல்லையில் நாகமொன்று இரதமும் வெடையாய்த் தாக்கி
நல்லதோர் கலசத்திட்டு நலமுள்ள பூரம் மிடாவில்
இல்லதா பொருத்துப் போட்டு சீலைமண் மூன்று செய்து
கொல்லுலை யேற்றி சாமங் கொடுந்தணலெரித்திடாயே.

மிடா, பானை.

எதிர்த்திரண்டு ஆமம் என்ன சொல்வேன் இந்தாரம்
உருத்திர பாணன் தன்னை ஒரு பணந் தேனிற்கொள்ள
அருத்த தோரடைப்பு மூன்றும் வாங்கிடும் கணங்களெல்லாம்.
பரித்திடு மிதற்குப் பத்தியம் பாரினிற் கமனந்தானே.

இல்லை

பீனிசத் தலைவலிக்கு, சௌரித் தைலம்.

பார்த்தனிற் சௌவுரிச் சாறேர் படியினிலாவின் பாலும்
நேரதாயடுப் பிலேற்றி நெடியமால் தனைத்துதித்து
சீருடன் சியாழஞ் செய்து திணைத்திரில் மிளகோர் சேரை
ஆருமுன் அரைத்துப் போட்டு அதன்பின் நல்லெண்ணை வரே.
வார்த்து மேதைலந்தன்னை வடித்தபின் சூட்டி வந்தால்.
நாற்றிசையறியச் சொல்வேன் நாமிதை செய்து பார்த்தோம்.
பேர்த்திடு வியாதியெல்லாம் பெரிய பீனசங்கள் போகும்.
மாற்றுமேயதிகமாகும் மண்டை நோவுயதுவுந் தீரும்.
(அஉ)

நாற்றிசை - நால் திசை.

பித்தத்திற்கு மூட்க - கீழ்க்காய் நெல்லித் தைலம்.

தீருமே பித்தம் போக திரும்பவும் கீழ்க்காய் நெல்லி
வேருமே பிரண்டி வந்து வெண்சலம் படியாறிட்டு
பாருமே படியோரிரண்டாற் பதமுட நாழி பாலும்
சீருடன் மிளகோர் சேரை திறக்க யெள்ளெண்ணெய் வரே.

நாழி - ஒரு - படி.

எண்ணையினை முட்டிவந்தால் இயல்புடன் தீரும் நோய் கேள்
நண்ணிய பித்தத்தாலே நரைத்திருக்கு தலை கருக்கும்
மண்ணிய வன்னியோர் நாற்பதுவும் போம்பல் நீரும் போம்
திண்ணமாக் சித்தர் மெச்சுஞ் செகமகிழ் தைலந்தானே.

வன்னியோர் நாற்பது - பித்தம் - ௫
கழைத்தில் தாளகபற்பம்.

வேறு,

செகத்துட் செப்புச் சிமிழ்தனில் இறக்க நிம்ப இலையரைத்
தகத்துள் தாளகம்பல - மதனுள் வைத்துச் சீலை மண்.
வகுத்துச் செய்வாய் மூன்றுதான் - வாமமாய்த் தும்பியோ புடம்,
பகுத்துப் பாரும் பற்பமாம் பரமன்றன் பணிந்திடே.

(சு.அ)

நிம்பம் - வேம்பு.

ஆம்பியோர் புடம் கஜபுடம் ஒன்று.

பணிந்து தேனிலோர் பணம் பாரிலுள்ள மாந்தர்கள்
அணிந்த கசை மெட்டையும். அறுக்கிடும் ஜெயத்தையும்
துணிந்த தோர்கப மெலாங் சோதிகண்ட கிருளை
பணிந்து ஒரு மிருமல் தான் பறுதத ர.ணை ஒருமே
(சுன)

சோதி - சூரியன்.

<u>பயித்தியம் பிடித்த வாக்கு முருக்காட்ட மருந்து</u>.

ஒருபேயன் தனைக் கொணர்ந்து பாயமாக தலை நிரை
காடு நெற்றி தனினிருந்து தணிந்தவுச்சி மாட்டுமே
வாடு கொண்டு நீசிநல்ல வநவதான பலகரை
காடு கன்னத் தேய்த்த கேசர் அம்பழச் சாறிட்டுமே
(சுஅ)

பேயன் - பயித்தியம் பிடித்தவன்,
அம்பழம் - எலுமிச்சம் பழம்.

இட்டாக்கி மூன்று பேரிடை விடாமல் நற்சலம்
சட்டமாக நூறு தழைந்தளர்ந்த மூச்சிடாமலே
எட்டியே நீ மூன்று இவ்விதந் கொடுத்திடில்
பட்டுப் போம் வியாதியும் பரக்கும் பேயும் பித்தமே (ஆணை)

அரக்கி - தேய்த்து தாழ்மிடா - நூருகுடஞ்சலம்.

பேய்வெறி பித்தத்திற்க்கு சிதம்பரச்சக்கரம்.

பித்தமே பறந்திடப் பேயனுக் கைம்பத்தொன்
றத்தனைத் துதிசெய்து அவன் கையிலிருக்கிட
சத்தமாதர் கூடிருக்கவங்கள் வந்து நேரினும்
அற்றுப் போம் வியாதியும் அரன் றன்னாணையுண்மையே.

ஐம்பத்தோரட்சரம் சிதம்பரசக்கரம்

இருக்கிட - கட்டிட

சத்தமாதர் - சத்தகன்னிகள் - சவம் - பேய்.

உண்மையான ஐம்பத் தொன்று ருதியான சக்கரம்
திண்மையான பேயுமில்லை தீநரகில் தீதில்லை
நன்மையாமனேக நேயு நாடும் போது காட்டிடில்
வண்மையான பலகரைக்கு வாய்த்த அண்ணாங் காட்டுவோம்.

பலகரை பற்பம்.

காட்டுவோங் கலசத்துள் கலந்துங் காடியரைபடி
நாட்டு வாய்க்கு சீலை செய்து வண்மையாக போட்டதை
மூட்டு பாண்ட மேல் கவிழ்த்து முன்னும் பின்னுந் தீயிடே

கலசத்தான் — இருபாண்டத்தான்.

தீயெரித்து பின் பெடுத்து சிலையைத் திறந்து பார்.
மாயுமப் பாகறை மன்றில் நீறு போல தாம்
தாயி பதந்துதிக் தெடுத்து தனிக்கும் புண்ணுக்கியந்திடல்
நோய் மிகுந்த மேகப்புண் தொடிக்கு முன் பறக்குமே.

சுயாக்கினி தைலம்.

பறக்கின்சூத மோர் பலம் பணிந்த கெந்தி யவ்வடை.
நறுக்கின் தார மோர் பலம் நன்மையான சிலையுடன்
இறக்கக்காய விட்டரைத் தேயுருட்டிச் சிலையில்
வெறுக்கும் வேப்பெண்ணெய்து வைத் தெரிய தீபமேத்திடே
(சூதம் - இரசம், கெந்தி - நெல்லிக் கெந்தகம்.
தாரம் - அரிதாரம் சிலை - மனோசிலை.

வேறு,

ஏற்றிய தீபத்தி லிறங்கு மெண்ணெ யைய
நாற்றிசை யோர் கொள்ளும் நாகவல்லியில்
மாற்றிடும் வியாதியை மருந்தின் வேகத்தான்
சாற்றிடும் பத்தியம் சமமத மாகுமே. (௫௫)

நாவாதி வெற்றிலை.

ஆகுந் தோள்வாத மங்கை வாதமும்.
ஏகுமே கால் முழங் காலின் வாதமும்.
போகு மெய் நடுக்கலும் புலியின் மீ தொரு
போகுமே வாதமும் பரந்து போகுமே.

அங்கை வாதம் உள்ளங்கை வாதம் மெய் சுரம்.

பாம்புகடி தீர மருந்து.

பறந்து போம் பானுவை பணியுந் தின்டு நாள்
சிறந்ததோர் தின்னியை தேடிக் காப்பிட்டு
இறந்திடு மனிதரை யெழுப்ப வேண்டி நீ
அறைந்திடும் மூசைக ளதிக மாகவே. (௬௭)

பானு - சூரியன் - பணிசர்ப்பம் - அல்லது சூரிய கிரணம்.

ஆகவே வாரணை மறுத்த பின் விடக்
சாகவே நதி மதி சலித்திடாமல் நீ
போகவே யுருவட்சம் புரிந்த பின் பணி
ஏகவே பார்த்திதை இறக்க நான்றரோ. (௬அ)

~~[illegible]~~.

வாரணம் - கோழி

நன்றுடன் குலிசஞ் செய் நாகவாகியே
இன்றுடன் மழந்தால் றெங்கிருக்கிறாய்
கன்றுடன் அடலையாங் காடுபுக்கிறாய்
சென்றுடல் விறைமெல்லாஞ் செய்கை காட்டவே
(ருசை)

நாகவல்லி — பாம்புபிடாரன்.

காட்டுவாய் முகத்தினிற் கலவரைக்குமே
கேட்டுவாய்க் குலிசத்தை முன்று விசை
ஆட்டுவாய் மந்திரம் சொல்லியப்படி
ஓட்டுவான் விஷத்தையு முகந் தெழும்புவானே
(ஆய)

சூலை வாயுவுக்கு எண்ணெய்.

வானத்தாவிய வல்லிய செம்பகந்
தானத்தைப் பிழத்தனை தரித்துவுட்குடல்
ஆனத்தைப் போக்கிடு யதனையோகுரல்
மோனத்திலிழுத்து தூளாக மோதுவாய். (சூ க)

செம்பகம் - செம் - பொத்து - அதை காரிக் காக்காய்.

மோதுவாய் முந்தெண்ணெய் மொண்டுவோர் படி
மீதுவார் செருப்படை மிகுந்த கழற்கொடி
நாதுவாய் மாதனை தாமரைப் படி
ஆதுவா புன்னிச் சாக்ரோ நிறையாரோ. (சூ உ)

விளக்கம் — வாய் விளக்கம்.

போடு செவ்விளநீர் பொங்கி விட்டதில்.
நாடுவா யெரியிடு நன்றாகவே
ஆடணெண் ணெயிற் அருக்குத் தங்கிடில்
பாடுவோ மெண் ணெயைப் பதமதாகவே (அஅ)

பதமதா யெண் ணெயைப் பாலனை வகுத்.
திதமதா யெருநாள் தினமுங் கொண்டிடில்
வதனமுஞ் சோதியாம் வாயில் நாரல் போம்
கதியும் பத்தியுங் காஸ் நிறுத்திட (அரு)

காஸ் – வாயு – வாயு – பதார்த்தங்களை நீக்கலென்பது.

கருக்து அரு - வேறு.

நிறுத்தும் போதினில் நியமயக் காலத்தின் மேகம்
கருத்தகுறுட முங் காய்கை நீர் சுருக்குடனெரிவும்.
பெருத்த ஆனையும் பேசிடாவாய்ப் பெரும்பாடும்
அருத்திடுமிது ஆறுநாள் முறை முறையறிவீர். (சாசா)

அறிவீரின்னமும் அப்பனே பழய நோயதார்க்கு
தெறியும் பத்தியங் தேன்புளி இகையுப் புவதனை
நெறியுடனிருத்தியோ ரேழு நாளானால்
ஏறிய தாகவே தான் புசிப்பாய் பல்நோய் போம்.

நேத்திர வாய்வுக்கு.

போகும் நேத்திர வாய்வுது பொருந்திடில் புலன் கேள்.
நாகவல்லியின் சாற்றினிற் அரக்கிரைத்ததனை
பாகமாயெடுத் தோர் பணந் தெறித் திடப் பதுங்கி
ஏகும் வாய்வுகளென்றும் வராது நேரேற்றம்

நாகவல்லி — வெத்திலை.

வெட்டுக் காயத்திற்கு.

ஏற்றமாகுஞ் சோறிருக்குங் கற்றாழையை யெடுத்து
சாற்றமானதை சரித்திருங் காயத்தில் சரியாய்
மாற்ற மூன்று நாள் மருகியே கட்டு வீராகில்
ஆற்றுங் காயத்தை அங்கணாணை மெய்யறிவீர் (சாகை)

சோறிருக்குங் கற்றாழை சோற்றுக் கற்றாழை.

கெர்ப்ப அபாயத்துக்கு எண்ணெய்.

அறிவீர் மங்கையாரவர்கள் தங்கருப்பக்காலத்தி
திரிதி ஙிற்கி மால் சீக்கிரம் வாங்கு முத்தெண்ணெய்
உறுதியோ மெறு முத்த மடங்கட மெணவும்
பருகபூசவெ பாலன் பிறப்பான் பார்தனிலே (எய)

சுகவிரோசனம் வண்ணக்கலை.

அறையவிரோசனமாகும் பரக்கெனக் கண்ணல்
குறு முனியன்றுரைத்தபர பிரியமுடன்

வெள்ளைக் குங்கிலியம் பலம்.

பேராய்க் கள்ளியில் வைத்து சீராய் புதைத்தெடுத்துப் பே
யனையடுத்து மண்டலஞ் சென்று மேன்மையாயெடுத்து.

அருளிப் பூவில்.

பற்றும் புகை பிடிக்க இத்தேச மன்னர்கள்
பாங்காயோர் தரமோர் நீங்காமல் போதியாம்
பாடு மிது சோதனையை நீடுமே. (எ.க)

பெரும்பாட்டுக்கு.

பெண்ணையுங் கடுக் கெல்லாம் நண்ணாய்ச் சொல்லுவேன்
பெரும்பாடுண்டாயிடில் இரும்பான் சகிலின் மூலம். (முறை
பேதையதைக் கொணர்ந்து வாதையால் தோல் நீவி
பெரிய துணியில் வைத்து உரியக்கிளி போல் கட்டி
பேசும் வேப் பெண்ணெய் தனில் வைத்தால் மேல்.

கை — சும்பா ரெண்ணையதில்.

கிளம்பக்கிளம்ப எடுத்தளம்பாமல் வெந்த பின்பு
உளம்பார்த்துக் கொண்டிட அழகாந்தேக முன்போல்
என்று முண்டோ வியாதியுனக் கினி மேல்.

சவிகின் மூலம் — சவ்கன் வேர்.

இரத்த பிரமியத்திற்கு.

அல்லவே மாந்தருக்கு தொல்வினையான ரத்தம்
ஆகும் பிரமியன் வாசாக வழந்திடல்
அன்பான தேங்காய்ப் பால் அதனுடை புங்கம் பால்
அசையா ஓரிதழ் மூலம் இசையாயெடுத் தரைத்து
அப்பவே கொடுத்து (மூன்று) நாளைக்கிப் பாலைத் தடுத்து

அவணை - வெகு,

ஆரபாரமாக்காற் சாரங் தள்ளி
நேரா பத்தியஞ் செய்தால்
தீருத வெள்ளையும் போம்
அரணா ணையிரு துண்மை யறிவீரே. (௫௨)

ஸ்ரீதழ் மூலம் — ஸ்ரீதழ் தாமரை.

பெண் ருதுவாக,

அன்பாயுங்களுக் கொரு தென்பு சொல்கிறேன் புத்தி
அரன் சென்னா ரெனக் கன்று திறஞ் சொன்னேன்று
ணக்கின்று அடவிகாணந் தன்னை திடமாயடுப்பிலேத்தி
அது வெந்த நீரை மூன்று நீ வேளை யீய்ந்துப்பாரே.

அதிசயங்களாகும் இருள்கருமே யேகும்
வல்வினை யெல்லாஞ் சாகும் (பிடித்த பேய்கள்)
காக மெருதிகட்டு.
அன்னை யென்பா ரனை யொரு முன்னையே. (௫௩)

நேர்வான சுத்தி

ஐயா வயித்தியரே மெய்யவானச் சுத்தி
ஆர்க்குந் தெரியமனை வோர்க்கு உரைக்க கேளு
அதனை சாணிதனில் விதன சுத்தி செய்து
அன்றை தோடெடுத்து இன்றை பசுவின் பாலில்
அடுப்பினி லேற்றி (சூடு கொண்டால்)
எடுத்து நீ யாற்றி (வெய்யலில் வைத்து)
ஆவி நெய்யதனை விட்டு ஔழ்தம் வறுத்துக் கொள்ளு
அழகான மருந்துக்கு தளகர்த்தனெமிது
அதுவே நேர்வான மதிகுவிரே. (எரு)

சாணினம் → சாணியென மருவியது.

ஆணுக்குப் பெண் இடு மருந்து.

பாரும் வேசியரெல்லாம் பண்பாய்ப் பிழைக்க வேண்டி
பாங்காயிடு மருந்து பார்தனில் மாந்தருக்கு
பச்சை ஓணான் பிடித்து பிச்சில் மிகவே யெடுத்து
பரமாய் ஆடையொட்டிடத் திறமாய் சிணுங்கி வேரும்
பால் நங்கை வேரும் எ.கர மூலி
கோல கொவ்வை வேரும் உன்னதத்தால்
பரிவாய் சாமம் ஆட்டி பிரிய மோகினி மூட்டி
பால் அன்னந்தனிலிட போர்வந்து சுடு
காடேறினு மவளை கைவிடான்.

சிணுங்கி _ தொட்டாற் சிணுங்கி, நங்கை → சிறியா நங்கை, எ.சுரமுலி → தலைச் சுருளி. கொவ்வை வேர் → கருஞ்சுரை. நாதம் → இரத்தம்.

(எ.கா)

ஆண் பிந்து தம்பனம்.

மன்னர் மாதர்களைச் சின்ன பின்னஞ் செய்ய
மகத்தான வேருண்டு ஜகத்திலதனைக் கண்டு
மங்களமாகவே சிங்கார சோட சோபசார மதாயுச்சரித்தபி
நமடக்கியே யெடுத்து தகடுதனிலடக்கி உட்கொடுத்தால்
பிறகட்டி அஞ்சாத பெண்களை நெருக்கக் கொஞ்சினும்
ஆணவத்தால் காமபாண மதனை யோடு
அடிபணிவாரென்னேரம் அருமை மாதர்.

மகத்தான வேர் பிரணவ முதன முளைக் கொடி.

ஸ்திரீ பிந்து தம்பனம் ஆண்பிரிய.

தங்கமான கிரியை இங்கித மாண்பர்கள்
தயவாயுந்தனைக் கொண்டு சுயமாய்ப் பொருள் கொடுத்தால்
தவசியதாகவே அவசிய மாயருள்
தாங்கிய நாளதனில் ஜம்பில சுருகாடேறி
தாரணைச் செய்தவீ வெருக்கு வாரணாங் கொய்து.

உச்சாட்டனம்.

தானையுப தேசித்து மானையதனைக் காட்டுக்கு
ஏனையிது வென்றெண்ணி நானே போகிறேன்பிரானை
நாயகியே யன்று நீதல் நாடிடான். (கா அ)

அவசியம் அகத்தியம் இருள் நாசிகியணள்
அமாவாசை. வாரணஞ் செய்து கோழி பலியிட்டு
அரத்திற்கு பாஷாணக் கட்டு.

அறுசீரடி யாசிரிய விருத்தம்.

அன்னமே பாஷாணத்தை யடவுடன் கட்ட வேண்டி
இன்னமும் பலம் ஒன்றாக எடுத்துவோர் பாண்டத்திட்டு
வன்னியச் சாறிரண்டு வாங்குடனதனை விட்டு
மன்னுநாள் நாற்பதாலில் மைமந்தனே யெடுத்திடாயே

வன்னியச்சாறிரண்டு வன்னியச்சாறிரண்டு படி.

உர்சா

எருத்ததை யடுப்பிலேற்றி யெரித்திடு மிரண்டு சாமம்
வடுப்படா கட்டி தன்னை வாங்கியே கழுவிப் பின்பு
கடுத்த கற்றாழை வேரில் கட்டியை தணித்து மூடி
தொடுத்திடுங் கஜடங்கள் தூயராலுங் கட்டியாமே

(அய)

கட்டியை சரக்கிற் சேர்த்தால் காலங்கும் வல்வினைக
ளெல்லாம் மட்டிலா வகாரமாகும் வன்னிக்கு மிகுவே
யாகும் பட்டுப் போம் வியாதியெல்லாம் பல பலமுறைக
ளாகேன் திட்டமாயிதனைக் கேட்பார் தேரை
யனென்ற போதே.

(அ.க)

வகாரம் - இரசிதவித்தை - o வன்னி நெருப்பு.

போதனை யடக்கவேண்டும் புண்ணிய விசாகனேறும்
ஆதனை யதனை தாக்கி அப்போதே யிறுகிப் போவான்.
நீதியாய்ச் சிவலோகத்தில் நீயது கொடுத்தா யாகில்
சோதியெழுரையு மாகுந் துயரறு மாற்று மாகும்.

ஆதனை காட்டாமனைக்கு. (அஉ

இறுகிப் போவான் → கட்டுப் போகும்.

அங்ஙனம்.

ஆமையின் கண்ணெடுத்து அப்பனை தூசினோடு
சேமமாயே ரண்டெண்ணெய்ச் சேர்த்ததைக் கருக்கிக் - |கொண்டு
ஊமையின் கையிற் போடு உலகெலாந் தெரியுமங்கே
நாடுமே வருவோர் கண்டாய் நற்பொருளதுவுங் கிட்டும்

தூசி → தினை.

இரசக்கட்டு.

கிட்டுங்கல் தேரை தன்னை தெருவமில்லாமல் வாங்கி
ஒட்டுமே புவனந் தைத்து ஒரு கழஞ்சிரதம் விட்டு
கெட்டிமேல் வாயுந் தைத்து தெண்மானேந்தி மூலி
வட்டமாய்க் கின்னங் செய்து வைத்திடு தேரை தன்னை

பவனம் - ஆசனவான. இரத்தம் ரசம்

மானேந்தி மூலி ஏ. அரமூலி.

தன்னையே சீலை செய்து சதுரங்க புடத்திற்ப் போடு
வன்னியாலிரதங் கட்டும் வாதங்களனேகமாகும்.
சென்னியிற் கட்டும் போது தேகதல மெல்லாந் தாண்டும்
நன்மைய அமிர்தக் கிந்தும் நரைதிரையற்றுப் போமே.

சதுரங்கபுடம் - கஜபுடம் - அல்லது நாலெனக் கொள்க

சென்னி இரச.

இரசச்சிந்தூரம்.

அற்றவோர் தேங்காய் தன்னை அதிகமாயிரு துண்டாக்கி
பற்றியா யெருக்கு மூலி பாங்குள்ள இரட்டைக் கப்பி
சித்தமாய் வழலைச் சேர்த்து சீக்கிரம் ரசத்தை வாத்தி
எத்திசையறியச் பொன்னைம் ஏருமண் சீலை செய்யே.

அருகுமூலி - வெள்ளெருக்கு இரட்டைக் கப்பி.

கொட்டாங்கச் சிக்கி அப்பி வழலை மூப்பு,
செய்திருங் தேங்காய் தன்னை சிறப்புள்ளப் புடத்திற்போடு
எய்தநீ ஆறவிட்டு எடுத்திடு வென்ன சொல்வேன்
வையகந்தனிலே அட்டிவைத்து நீசெட்டி விட்டு
பொய்யதிலேற்றும் போது புகழ்கின்ற நாதம் வாதே.

பொய் அடுப்பு நாதம் சுத்தசலம்.

நாகம் வார்த்தெரிக்கும் போது நன்றதாயுருகியாடும்
ஊதகமேல் நெருப்பதன்னை ஒரு பலம் பசுவின் வெண்ணெய்
கீதமாய் கௌரியோடு கிஞ்சுக புகுகும் போடு
சோதியாம் வழலை போட துவிதத்திற் கதி கர்தானே.

கௌரி — கௌரிப் பாஷாணம்,
கிஞ்சுகம் - சிவப்பு துவிதம் - இரண்டு.

துவிதமாஞ் சிந்தூரத்தை தோத்தரித்ததனை வைத்து
அவிதமா நவலோகங்க ளடவுடனுருக்கும் போது
பவிதமாயனு போ விட்டால் பார்க்குமுன் ஏமமாகும்
வலியுடையோர்க்கு வாய்க்கும் நாம் சொல்லு முறையிதாமே.

ஏமம் — பொன்.

புறையிது தவழ் கூட்டாமு முன்னிது தாவும் போது
சிறைகளில் வீழ்ந்தே காலுங் கையொடிந்ததுவும் போகும்.
துரைசபைக் கேகும் போது சுருக்கிட குணம்போல்
நெற்றிப் பிறைகளில் திலகம் போட்டுப் பேசிட
வழக்கு நன்றே.

(சிறை)

நன்றிதுவாத மெல்லாம் நடுக்குஞ் சிந்தூரத் தாலே.
ஒன்று நாற்பதுவாம் வன்னி ஓடிடும் புவியை விட்டு
சென்றிடுந் தொண்ணூற்றுச் சேஷமமு மகாமித்தை,
மன்றுளோர் வருமுண்டால் மாதவர்க்கிது சமானமே.

(கைக)

நாற்பதுவாம் வன்னி பித்தம் நாற்பது.
மன்று - நேத்தலம் — அதாவதுலகு.

ஆமேயிக் கலியுகத்தில் ஐயிருவருஷந் தன்னில்
நாமே சேஷம் வியாதி தரணியில் மாந்தர்க்காகும்
போமிதால் வாந்திபேதி பொங்குமே அனேகமாக
நாமிது போகச் சொல்வோம் நாரணன் தங்கை பாதம்.

நாரணன் தங்கைதன்னை நமஸ்கரியிதுவும் போகும்
வாரணமுகவன் சொன்ன வங்க சிந்தூரங் கொண்டு
காரண முவைந்தாலில் கருங்குஷ்டமதுவுண்டாகும்
பூரண கும்பம் பண்ணி புவனையை போற்றிச் செய்யே.

வாரணமுகவன் - விநாயகன்
புவனை - சக்தி அகேசுத்தசலம்.

செய்து நாமபூரங் கொண்டு சென்றிடும் வியாதியெல்லாம்
யெய்து மொழிருபதானில் ஏகமாம் வாது நோய்தான்
கொய்து முப்பலியும் நன்றாய்க் கொடுத்திடும் பூசைநன்மை
மைதில புரையின்பாத மனதினிலிருத்திக் கொள்ளே
(௯௪)

கொள்ளுவா யோகக் தன்னைக் கோவெலி அலரியோடும்,
எள்ளளவாகவே தான் எடுத்தொரு மூன்று நாளும்,
உள்ளுக்குக் கொடுப்பாய் அக்கில் ஓதுமேவாதமெல்லாம்,
தள்ளமேயில்லையிந்த காரிய மாயன் சொன்னார்
௯௫)

மாயன் → விஷ்ணு.

நரம்புசிலந்திக்கு மருந்து.

மாயன் சொல்லின்னங் கேளு மானிடர் தனக்குயின்னம்
நேயனர் சிலந்தி கண்டால் நேரிடும் வகையே தென்னில்
தோய விரோசனந்தான் - தொடுக்குமோர் வினைமோலெல்லாம்,
காயம்போல் அரிப்பெடுக்குங் கைகண்ட மருந்துகேளீர்.

(வைசா)

கண்டதோர் அருக்கருவேர் கருணைவேர் இஃகிவேம்,
பண்டுமாபோல் அரைத்து பதக்கினில் அவித்தெடுத்து.
புண்டுமேல் கட்டத்தீரும் போகும் புண்டுன்று நாளில்,
தெண்டன்றே எனக்குப்போடு தேரையன் முறைதப்பாதே.

புண்டு - நரம்ப - சிலந்தியின் புண், (வைரு)

பெருவயிறு விக்கத்திற்கு.

தப்புஞ்சாரணை கொழுந்து அரிசியிடை அப்புங் கூட்டி
அப்புடி ஆவின் பாலில் துரிதமாய்க் கொண்டாயானால்.
அப்போதே வாங்கும் பேதி லழ வயறு கழியு மின்னம்,
உப்பில்லாக் கஞ்சி கொள்ளு மொடுங்குபேர் வயிறுந்தேயும்.

வசியம்:

தேய்ந்து போகாமல் மாந்தர் செழிப்புடனிருக்க வேண்டி
ஆய்ந்த புல்லுருவி வாங்கி அதனை தேனதிற் குழப்பி
கேய்ந்திடும் பானுவுக்கும் கனிய அக்கிரர்க்கும்
சாய்ந்திடா திலதம் போட க்ஷணத்தினில் வசியமாவார்.

பானு சூரியன் – அதே – ஆதிவாரம்
அக்கிரன் – வெள்ளி.

ஆமே அம்புலி வியாழம் அப்பனை நெய்யிற் போட்டு,
தாமே செவ்வாய் புதற்கு தாழ்வில்லா பாலிற் போட்டு
நாமந்தன் தயிரிற் போடு நன்றதாய் வசிய மோரில்
சோமன்போல் இனிய மாகிற் றுரைகள்தான் வாசமாவாரே

அம்புலி சந்திரன் - அதே - திங்கட்கிழமை
புதற்கு புதனுக்கு மந்தன் சனிக்கிழமை.

வசமதாய் இந்நூறும் வாகுடன் பார்த்த பேர்கள்
திசமுள்ள வயித்திய மாவார் நெடும்புவி யுள்ளோ ரெல்லாம்.
திசைமுகனருளால் சொன்ன தேரையன் மருந்து கொண்டோர்
புசபல மிகவுண்டாகி புவிதனில் வாழ்வதாகும்.
(௱)

திசைமுகன் — பிரமன்

தேரையர் அருளிச் செய்த
வைத்தியம் ௱,
முற்றிற்று.

சிவமயம்.

நூற்றி ஐந்தாவது,

ஜனகமகாமுனிவர் அருளிச் செய்த

பிரமதண்டி யெண்ணெய், ௧௧.

—— x xx ——

வகையான யெண்ணெய் தனைப்புகலக் கேளு
வனந்தபிணி தீர்வதற்கு ஆட்சமாகும்

தகையான பிரமதண்டைச் சமூலமாக
துரிதமதாயிடித்தசாறு படியதொன்று

நகையாதே வெந்தியமும் நற்சீரகந்தான்
நலம்பெறவே அதிமதுரம் பல முமைந்து

பகையாமற் பிடித்து நன்றயிக் காச்ச பின்னர்
பதமுடனே யிறக்கெண்ணெய்ச் சேர்ப்பீர்தானே.

எண்ணெயது முக்கால்தான் பழயதாகும்
யெற்கனவே மிகக்கூட்டி வடிப்பிலேற்றி
திண்ணமது திரந்திடவே தீபம் போலே
தீர்க்கமதா யெரித்திறக்கிப் புனற் தங்காமல்
வண்ணமுறையே யெடுத்து யிருத்தோர் பிங்கான்
வகையான பாண்டத்தி லூற்றிவையேதான்
அண்ணவென மனதில் வைத்துப் பிணியாளர்க்கு
வன்புடனே இருகரண்டியளவ தாமே. (உ)

அளவெடைதான் கொடுத்திட வேயிதில் சேர்கின்ற

அடங்காத கைகாலின் பிடிப்பு நோய்கள்

நரம்பிறிற்கும் வாதமொடு மேக வெள்ளை

தயங்கிய நோய்த் தாங்காமல் நீங்கிப் போகும்,

இளைப்பியது மேற்கொண்டு யேறிடாது

குணமான ஆகாசலறிந்த வித்தை

காங்கமறுந் தேகத்தின் பிணியை மாற்றி

கனத்தயிந்த வியாதியெல்லாம் போகுந்தானே.

(ஙு)

தானென்ற மூலியிது ரெணத்தை யாற்றும்
தப்பாது தப்பாது பிழைப்பணைத்தும் போகும்
நானென்று பேசுவதேன் பெரியோர் சொல்லால்
காணிக்த விதப்பழன் மெனவே சொன்னேன்
பேனென்ற சொல்லது போல் பேசுகின்ற
பிசைவான மூலியென செப்பலாகும்
கானென்ற வரிசையுடன் செய்த பேர்க்கு
கருதிய சொற்றவருமல் நடக்கின்றானே
(அ)

நடத்தினதோர் வெண்ணைன்றல் பெலமதாக
கன்கை பேதித்து நோயைத் தீர்க்கும்

சடத்தினிலே நான் சென்று யிருக்கின்ற
தலிப்பான வியாதிகளைக் கண்டித் தாற்றும்

படத்தினிலே யெழுதி வைத்த பண்மை போல
பருவமதாய் செப்புது பாரிந்த நூலில்

இடத்தையறிந்தே புணர்ந்தால் விண்டு கிற்கும்
இயல்பான தொழில் வழியின் மார்க்கந்தானே

(௩)

மார்க்கமுள்ள சாத்திரத்தைப் படித்த பேர்கள்
மனதுகந்து தேர்ந்து நின்று மிமகிழ்வாய்ச் செய்வார்
யோர்க்கையுள்ள இலக்கணமாய் மருந்தினைசத்து
யேற்றிடவே சொன்னதொ லாபமென்ன
தீர்க்கமுடன் வெளிப்படையாயிருந்தால் நன்றாம்
செய்வதற்கிலகுவாகுஞ் செழிப்பதாகும்
ஆர்க்குமிதுவுதவு கின்ற வாருக் கொள்ளு
அறிந்து கொடிலேற்றுவது ஆதிதந்தானே

பத்தியம்.

ஏற்றிய தோரெண்ணெய் விதைப் பத்தியத்தைக் கேளு

எதிலான வாட்டுறைச்சித் துவரையாகும்.

ஆற்றிய தோர் சிறு பயறுவுள்ளாகும்

அன்பான கத்திரிக்காய் பிஞ்சதாகும்

மாற்றிய தோர் வெண்டைக்காய் பிஞ்சிதானும்

மணமறிய மிளகின்றாலிட்டுப் புசிக்கலாகும்

சாற்றிய தோர் அரைக்கீரை புண்ணலாகும்

சாதகமதில் பாலிட்டு மருந்தலாமே

எ.

வெள்ளைப் பூண்டு கடுகு தள்ளவும் புளியைச்சுட்டு
உப்பு வறுத்துக் கூட்டவும்.

அடுக்கினவர் தங்களுக்குச் சொன்ன நோய்கள்

அணுகாது கடும்பத்திய மா யிருக்கால் நன்று

திருந்தவே தானந்தப் பறயே ஆயி சொல்ல

திறந்து விட்டெனை நீயாமல் மறைத்திடாமல்

மருந்து வகையான திலேயிது வோர் மூலி

மகா பெரியோர் பார்த்துணர்ந்த வித்தையப்பா

பெருந்தபத் தோர்ப்புகன்றதனை வாராய்ந்து மேலாய்

பேசினதென்றேவுனக்கின் பேணிப்பாரே.

(அ)

இதற்கு ஸ்நானஞ் செய்ய அலரிகிர்த யெண்ணெய்.

பேணியே விளம்புகிறேன் ஆதண்டை வேரும்

பிதிய முள்ள பட்டையொடு நன்னாரி வேரும்

ஊணியே சடாமாஞ்சி இல்வை வேரும்

உண்மையுடன் குறைப்பாய் பலம் ரெண்டாக

ஆணியாம் வரலி விட்டு பிழுத்து நன்றாய்

அகண்டவொரு பாண்டத்தில் போட்டுக் கொண்டு

காணியாம் வெள்ளெண்ணெய் வரைப்படி தான் விட்டு

கவனமதா யெரித்திறக்கிச் அரம் போடே.

கோ:

சாரமது வெகு காஞ்சிப் பொடித்துக் கூட்டு

சுபா செனவே ஆயிபதம் பூசித் தேதான்

காரமுள்ள தேகமிலை யறிந்து பார்த்துக்

கருணையுடன் றலை முகெச் சொல்லு சொல்லு

திரமுடன் திறு பயறு சீக்காய்த் தேய்த்து

செழிக்கவே வெந்நீரால் ஸ்நான மாக்கி

பாரமில்லா ஆட்டிறைச்சி வற்றல் கூட்டி

பகர்வுடனே புசித்திடவே அதிவிதமுமாமே.

(௰)

கியாழம்.

புசித்தபின் போர் பாகமதைப் புகலக் கேளு
பேர் பெரிய முளகது தான் பலந்தானென்று
சுகிகரத்தின் சீரகமும் பலமுங்கால் தான்
சுருக்காகக் கியாழமிட்டுக் குடிக்கச் சொல்லு

வசிகர மருந்தினை வெடுத்த வேகம்
வணங்கியே தேகமது இளைய தாகும்

பசியெடுக்கும் நடப்பதற்கு இருப்பதாகும்
பண்புடனே செய் தொழிலின் பாகந்தானே.
௧௧.

ஸ்நானஞ் செய்த ஐந்து நாளைக்குப் பின்பு காலையில் ஒரு தரம் இந்தக் கியாழம் குடிக்கவும் வெண்ணெய் வேண்டுமானால் கூட்டிக் கொள்ளவும்.

ஜனக மகா முனிவர் அருளிச் செய்த
பிரமதண்ட யெண்ணெய் - ௧௧
முற்றிற்று :
—x x—.

கணபதி துணை.

நூற்றி ஆறுவது.

குதம்பசித்தர் திருவாய் மலர்ந்தருளிய,

சந்திரோதயக் குளிகை - கூ.

——→ × × ——.

காட்டமுடன் குளிகையொன்று நவிலக் கேளு
    நலமான பெரியோர்களறிந்து செய்வார்
தேட்டமுட னையதனை யகற்றியே தான்
    திரேகமதைக் குணப்படுத்தும் செவ்வையாக
வாட்டமில்லா ரசகற்பூர பலமுங்கால் தான்
    வளமான குங்குமப்பூ பலமதொன்று
நாட்டமுகமதான திரு பச்சை பூரம்
    தவராமற் சேர்ப்பீர் மிகப் பலங்காலாமே (க)

பலங்கால் தான் லவங்கப்பூ லவங்கப் பட்டை

பரிவான கோஷ்டமது கால்தானப்பா

நலங்காமல் அன்னி கெற்ப மரைக் காலாகும்

நலமான சரக்கனைத்தும் வொன்றாய்ச் சேர்த்து

தலமான தலமறிந்து பெரியோர் செய்த

தவறாத பாகமென்றே மனதில் வைத்து

பெலமான கல்வத்திற் போட்டரைத்து பி

பேர் பெறவேகியாழம் வைத்து அரைப்பீர் தானே.

இயாழம்:

தாணெ சந்தனந்தான் பலமுமைந்து
தயையானலவுங்கப்பூ முத்தக் காசு

கோணெ மாஞ்சிறு நாகப் பூவும்
இணம் பெறவே யிது நாலும் வகைக் கோர் காசு

தேணெ சட்டிதனில் இடித்துப் போட்டு
தீர்க்கமதாய் நன்றகக் இயாழமிட்டு

பாணைப் பதம் பார்த்து வரைத் தரைத்து
பதர்வுடனே ரெண்டு நாளைப் பீர் தானே.

(௩)

அரைப்புப் பாகம்.

நான் தவறிப் போகாம லாட்டி யாட்டி
நயன மதிலிட் டெடுத்து மைபோல் பாகு
ஆள் திறந்துப் பெலமாக வரைத்த போது
அம்மம்மாயென்ன சொல்வேன் பிசினி போலாம்
தாள்யெடுத்துப் பெருகாம லிணக்கமாக
துரிதமுடன்குனெடுத்து வருட்டிக் கொண்டு
வாள் கொடுத்தவரசரைப் போல் இனிமை செய்ய
வயணமுடன் விளம்புகின்றேன் மகிழ்ந்து கேளே.

(க)

வியாதிகள் தீருங்குணங்கள்.

மகிழ்ந்துவரக் குளிகை செய்வீர் இன்றிபோல

மாதிறமையாகவேதான் உருட்டிக் கொண்டு

புகழ்வாகப் பரணிதனி லடைத்து மேலாய்

புண்ணியர்க்குக் கிடைத்த தென்றே கடவுள்பாதம்

அகமகிழ்ப்பூசை செய்து வைத்தன்பாக

அடவுடனே திரிகடுகுத் தேனிலாதல்

இகழாமல் துளசிரசந் தன்னிலேற்ற

இசைந்தசுரம் சன்னியெல்லா நீங்கிப் போமே.

ஏங்கிவிடு மயக்கமொடு இரசில் ஒற்கும்.

இசைவிலா வாத பித்தந் தனையே நீக்கும்

தாங்கிவரும் பாரித்த நோய்கள் மற்ற

தலைவலித்தல் வாயாச மெல்லாம் போகும்

பூங்கிய சொற்ற வராமல் வணந்த நோயை

வெட்டிவிக்கிக் கீதாங்காணுகிடாமல்

ஏங்கியே போவதற்குச் சந்தேகமில்லை

தொனித்து வதுபாணத் தோடநீந்தே செய்வீர்.

ஐயத்தைச் சமாதானப் படுத்தும் பத்தியம்,

அறிந்திதற்குப் பத்தியத்தை கேட்டீர் மிக்க
அன்பான வாட்டிறைச்சி முருங்கைப் பிஞ்சாம்
முற்று விடா கத்திரிக்காய் பிஞ்சதாகும்
முருதுவரை மொகுநீர் சாதமாகும்
தெறிந்தபடி நிதானித்து வியாதி தன்னை
தெளிவுடனே பகர்ந்துமிகக் கொடுப்பீராகில்
செரிந்தபிந்தக் குணங்கள் முதலான தெல்லாம்
சொல்லாமல் நீங்குமப்பா திறமை பாரே

௭,

ஸ்நானஞ் செய்ய எண்ணெய்.

அப்பனே ஸ்நானமது செய்வதற்கு

அதிவிதமாய் விளம்புகிறேன் வினவாய்க் கேளு

தப்பிதங்கள் சொல்லவில்லை நல்லெண்ணெய் தன்னில்

தணிந்தகரிய சீரகமும் கஸ்தூரி மஞ்சள்

ஒப்பனையாய் வகைக்கு வொரு பலமும் போடு

ஒல்கிய சொற்றவராமல் பாரு பாரு

செப்பினேன் அருகன் வேர் பலந்தான் சேர்த்து

செழிப்புடனே யெரித்திறக்கி ஸ்நானஞ் செய்யே

இறக்கியிதல் அரமது விராகனிடையே போடு
இன்பமுடன் முருகவேதான் இணமாந் தேகம்

திறக்கவே தியக்காய் வெந்நீர் விட்டு
திராமல் செய்து மிகத் தேர்ந்து பார்ப்பீர்

மறவாமல் பத்தியமா யசன முற்று
மற்ற யெந்த நாளில் பலக் கறிகாய் கருண்ணு

அறந்தழைக்கவாத் தாணைப் பூசைப் பண்ணு
அநுதினமும் நல்வழியில் நிலைப்பீர் தாமே.

குதம்பை சித்தர்.

சந்திரோதய குளிகை - ௯.

முற்றிற்று.

உ.

கடவுள் துணை.

நூற்றி ஏழாவது

கண்ணைநாதர் அருளிச் செய்த

கெருடன் கிழங்கெண்ணெய் - ய.

தொழிலான தொழிலொன்று விளம்பக் கேளு
தொக்கிதனை செய்தவர்க்கு மெத்த நன்று
வழியான கெருடனிடக் கிழங்கு தன்னை
வயணமுடன் கண்ணிவிடு மைபோற் செய்து
அறியாமல் கிழியில் வைத்து அலர்க்க பின்பு
அடவுடனே பனிரெண்டு பலந்தான் தூக்கி
ஊழியதனில் பார்த்து நன்குய் வினவதாக
ஐயுல்புடனே கடைச்சரக்கை கூட்டுவீரே.
(௧)

கடைச்சரக்காம் இலாங்கம்வா துணைவையொடு

கனமான திரிகடுகு கரிய சீரகமொக்க.

நடையாக வகைக்கு வொரு பலமதாக.

நாழியே பிழிந்ததனைச் சேர்த்துக் கொண்டு

நடையறவே அகண்டதொரு பாண்டத்திட்டு

தனியான விளக்கெண்ணெய் வரைப் படிதான்
சேர்த்து

இடையான வெங்காய மிகுத்துக் கூட்டி

இன்பமுடன் வடுப்பேற்றி யெரிப்பீர் தாமே.

(௨)

வெங்காயம் - ௰௨ - பாகம் போடவும்.

அடுப்பேத்திற் றியதனை மெதுவ தாக்கி
அமர்ந்து மெள்ள பார்த்திறக்கு புனலி தாங்காமல்
கடுப்பேற்றியனல் மெத்த மீறி நின்றால்
காய்ந்த பதம் சரியாக வரமாட்டாது
எடுத்து விடுக்கை வரிசை நிதானங் கண்டு
யேற்கனவே வழத்திருத்து வைத்துக் கொண்டு
கொடுத்த பொல்லா கிரந்தி குட்டம் கிரி மேகங்கள்
தொலையாத வெண்ணையறை யாப்புக் கென்றே
(௫)

அறையாப்பு மேகரணம் விறபாகங்கள்
அலைவான மேகத்தி ஞாறல் வெப்பு
திறையானப் புருவெட்டு பலந்திற் சிக்கல்
தேரையமான தொரு நோய்களெல்லாம்.
மறைவாகப் பதுங்கிவிடும் நேர்ந்து பாரு
மலக்கட்டு வயிற்றிறைச்சல் அர்ரணங்கள்
குறையாமல் தீர்க்குமப்பா அறிந்து செய்யில்
கோடான கோடி பிணி யகன்று போமே.

(ரு)

முதலாவது கெருடன் கிழங்கையும் கடை சரக்கையும் தியாழம் வைத்து காச்சிய பின்பு யிருந்து வெண்ணையில் சேர்த்துப் பாகமாகக் கூட்டிச் செய்யவும். அல்லது வொன்றாகக் கூட்டிக் காய்ச்சிக் கொள்ளவும்.

இதற்குப் பத்தியம்.

பிணியதற்குப் பத்தியத்தில் வைத்து யெற்றிற
பிழையாகச் செய்வதனில் தர்மமாகும்
அணியான வார்த்தை சொல்லிப் பணத்தைக் கேட்டு
அவர் இலவுக் கேற்றபடி செய்துக் கொண்டால்
மணியான வொளி மீதில் நின்றதாய் தான்
மனமகிழ்ச்சியாகாமல் சிறப்பாளப்பா.

கணிதமுடன் கடும்பத்தியமாக வைத்து
கடந்த பின்பு பச்சா பத்தியமா யிருக்கச் செய்யே
இது பயிறு நெய் சம்பாவரிசி சேர்த்து சமைத்தவன்
ணவும் இச்சடி செய்து புசிக்கவும்.

இதற்கு ஸ்நானஞ் செய்ய எண்ணெய்.

பத்தியத்தில் பிசகாம லிருக்கச் சொல்லு
பரிவுடனே மண்டலமென் றிசைந்து சொல்லு
சுத்தியுடனிருந்து செபஞ் செய்யச் சொல்லு
சோம்பல்தனில் நாடாமல் விழித்திருக்கச் சொல்லு
மெத்த நடையாகாது பிணியாளர்க்கு
விதனமுறும் பண்டிதர்மேல் பழிசொல்ல வேண்டாம்
நித்தமும் தான் காலை தனிற் செபத்தில் நின்று
நிதானித்துத் தொழில்களெல்லா முடிப்பீர் தாமே.

ஆமென்ற விளாமிச்சன் வேர் பலம தொன்று

அயெ திரு வெட்டிவேர் பலம தொன்று

நாமென்றவில் வையுட பழம தொன்று

நன்மையுள்ள அதாப் பூவும் பலம தொன்று

தேனென்ற கோஷ்ட மொடு அருகன் வேர்

சிறந்த தொரு பூலாவின் கிழங்கு சீந்தில்

காணென்ற சடாமாஞ்சி கற்கடகம் நெள்ளி

கனத்த வற்றல் சீரகமும் வகைக் கோர் காசே.

(௭)

வகைக்கு வகைப் பார்த்தெடுத்து பிழுத்த பின்னர்

வளமான அந்தனற்றால் பலமும் ரெண்டு

துகையாக இரு தேக்கி பல மும்கால் தான்

துணையாக வொண்டுகக் கூட்டியே தான்

பகையாற வெள்ளெண்ணெய் வறைப் பழயிற்றிடும்

பரிவுடனே சேர்த்துமிக வெறிந்து வாகாய்

தகையாமலி றக்கி வைத்து வடித்த பின்பு

தனிமையுள்ள சீனியது விருகன் போடே.

(அ)

பொட்ட பின்பு தலைமுழுக வரிசை கேளு

போன்ற யெண்ணெய் தேய்த்து நன்குய் மேலிற்றேய்த்து

வாட்ட மற தியக்காய் வெந்நீரிட்டு

வயணமுடன் ஸ்நானமது மான பின்பு

தேட்டமதாய் வாட்டிறச்சி துவரை சேர்த்து

தென்புடனே கறி சமைத்து அசனஞ்செய்ய

ஆட்டமிட்ட நோயனைத்து மகன்று தப்பா

வறிவான பண்டிதர்கள் உண்மைதானே.

(கூ)

மண்டலம் அல்லது அரைமண்டலம் - ௰ நாள் அல்லது - ரு - நாள் யெண்ணெய் முழுக்கச் சொல்லவும் பத்தியமாக நடக்கச் சொல்லவும்.

வேறு விருத்தம்.

உண்மை யாயிருந்தால் ஒதுங்கிடும் நோயது
உண்மை யாயிருந்தால் ஒருபோதுந் தப்பாது
உண்மை யாயிருந்தால் வேதலா வேதமும்
உண்மை யாயிருந்தால் ஒருவரால் கார்க்குமே.

கண்ணனார் அருளிச் செய்த

கெருடன் கிழங் கெண்ணெய் - ய

முற்றிற்று.

———— × ×× ————.